# வருடாந்த அறிக்கையும்
# கணக்காய்வும்
# 2015

## இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும்
கண்டி மரபுரிமைகள் அமைச்சு




“சமாஜ ஆரக்ஸன பியச” இல:18, இராஜகிரிய வீதி, இரா
ஜகிரிய

உள்ளடகம்


| | | |
|---|---|---|
| I | தொலைநோக்கு மற்றும் பணி | 1 |
| II | தவிசாளர் அவர்களின் செயதி | 2 |
| III | நிறைவேற்றுப் பணிப்பாளர் அவர்களின் செய்தி | 3 |
| IV | பொது முகாமையாளர் அவர்களின் செய்தி | 4 |
| V | முன்னைநாள் தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் தற்போதைய பணிப்பாளர் சபை | 5 |
| VI | இலங்கைப் பாதுகாப்புச் சபை–கட்டமைப்புக் குறிப்பு | 6 |
| VII | இலங்கைப் பாதுகாப்புச் சபையின் பணி | 7 |

1. நிர்வாகப் பிரிவு ------------------------------------------------------------------------------- 8

| | | |
|---|---|---|
| 1.1 | நிறுவுதல், அலுவலகங்களை அமைத்தல் மற்றும் வேறுபடுத்துதல் | 8 |
| 1.2 | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் வெற்றிடங்கள் | 9-10 |
| 1.3 | அங். ஆளணியினை அதிகரித்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் | 10 |
| 1.4 | 2015 ஆம் ஆண்டில் விலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல். | 10 |
| 1.5 | நிர்வாகப் பிரிவின் தற்போதைய ஆளணி | 10 |
| 1.6 | பௌதிக வளங்கள் | 11 |
| 1.7 | தொடர்பாடல் வசதிகள் | 11 |
| 1.8 | போக்குவரத்து வசதிகள் | 11 |
| 1.9 | வாகனங்களின் விபரங்கள் | 12 |
| 1.10 | நிர்வாகப் பிரிவு | 12 |
| 1.11 | கணனிப் பிரிவு | 13 |
| 1.12 | 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள் | 13 |
| 1.13 | கணனிப் பிரிவின் ஆளணி | 14 |

2. சமூகப் பாதுகாப்புப் பிரிவு ---------------------------------------------------------------------- 15

2.1 சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரதான செயற்பாடுகள் 15

2.2 சேவைப் பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் 15

2.3 முன்னேற்றத் திட்டத்தினை அமுற்படுத்துதல் மற்றும் தொடர்புபடும் உத்தியோகத்தர்கள் 16

2.4 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம் 17
2015 ஆம் ஆண்டு மாவட்ட ரீதியில் ஆட்சேர்ப்பு

2.5 2015 ஆம் ஆண்டின் பயன்களை வழங்குதல் 18

2.6 2015 ஆம் ஆண்டின் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட நிதி 18

2.7 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள் 18

2.8 சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரச்சினைகள் 18 – 19

3. நிதிப் பிரிவு ---------------------------------------------------------------------------- 19

3.1 பொதுவான விடயங்கள் 19

3.2 நிதிப் பிரிவின் ஆளணி 19

4. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ---------------------------------------------------------- 20

4.1 விடயப் பரப்பு 20

4.2 கடமைப் பொறுப்பு 20 –21

4.3 கணகாய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 21

4.4 2015 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 21 –22

4.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவிகள் மற்றும் வெற்றிடங்கள் 22

5. நன்றி -------------------------------------------------------------------------------- 23

# இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை

## தொலைநோக்கு

சமூக பாதுகாப்பு மூலம் காக்கப்பட்ட அபிமானமான ஓர் இனம்

## பணித்திட்டம்

அபிமானத்துடனானதோர் இனத்தை கட்டியெழுப்பும் முகமாக சமூக பாதுகாப்புக்கொள்கையை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைமை மூலம் சிறந்த நிர்வாக கொள்கையை பின்பற்றி இலங்கைவாழ் மக்களின் பொருளாதார, சமூக, கலாசாரத்தின் பாதுகாப்புத் தன்மைக்காக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்பி காத்திரமான அபிவிருத்தியை நோக்கி ..................

# தவிசாளர் அவர்களின் செய்தி

சமூகப் பாதுகாப்பு என்பது ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்டை மனித உரிமையொன்றாகும். இலங்கையினுள் அரச ஊழியர்கள், பிரத்தியேகப் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ளோர்கள் மற்றும் ஏனைய சமுதாயத்திற்கென பல்வேறான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டாலும், சமூக விஞ்ஞானம், பொருளாதாரம் மற்றும் ஏனைய சாதனங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தும்போது திருப்தியடையாத நிலைமையே காணப்படுகின்றது.

விசேடமாக மூத்த பிரஜைகள் சனத்தொகை 2041 ஆம் ஆண்டளவில் மொத்த சனத்தொகையின் 24.9% ஆக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. அது தற்போதைய மூத்த பிரஜைகள் சனத்தொகை வீதத்தின் இரு மடங்காகும். ஒவ்வொரு பிரஜைகளின் ஆறுபேரில் ஒருவர் 60 வயதினைத் தாண்டும் இச்சவாலினை நாம் வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. அப்படிச் செய்யாது விட்டால் எதிர்காலச் சந்ததியினரின் பிள்ளைகள், அரசு மற்றும் பொதுவான மக்கள் சமுதாயம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

மேற்குறிப்பிட் சவால்களுக்குச் சிறந்த தீர்வு, பல்வேறான பங்களிப்பு மூலோபாயங்களுடனான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் முன்மொழிவுத் திட்டமொன்றினை அமுற்படுத்துவதாகும். அது தொடர்பில் தலைமைத்துவத்தினை வகிப்பதற்கு இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபைக்கு வலு மற்றும் திறன் உள்ளது. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் கௌரவ எஸ்.பீ. திசானாயக்க அவர்களின் உன்னத தலையீடு, வழிகாட்டல், பிரதியமைச்சர் கௌரவ. ரஞ்சன் ராமநாயக்க அவர்களின் உதவி மற்றும் அமைச்சுச் செயலாளரினை உள்ளடக்கிய உத்தியோகத்தர்களின் சேவை பாரிய வலுவானதொன்று என்பதை நினைவுகூர விரும்புகின்றேன்.

2015 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரை நிதி அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்பட்ட இச்சபை 2015 ஆம் ஆண்டில் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்பட்டு ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம் தொடர்பில் உயிரணு (Biological) மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்று நிலைமையினை பகுப்பாய்வு செய்து புதிய அணுகுமுறைக்கு முன் வைத்த முன்னைநாள் பணிப்பாளரினை உள்ளடக்கிய பணிப்பாளர் சபை, அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் ஒட்டுமொத்த உத்தியோகத்தர் குழாம் நிறைவேற்றிய சேவையினை இத்தருணத்தில் பாராட்டுகின்றேன்.

சமூகப் பாதுகாப்பு விடயத்திற்கு நிகரான களத்துறையில் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தினைக் கொண்ட புதிய பணிப்பாளர் சபை, 2015, திசம்பர் மாதத்தில் கௌரவ அமைச்சர் எஸ்.பீ. திசானாயக்க அவர்களினால் நியமிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2015.12.09 ஆந் திகதி நான் தவிசாளராகக் கடமையினைப் பொறுப்பேற்றதோடு, அவ்வேளையில் சபையில் காணப்பட்ட நிலைமையினைப் புலனாய்வு செய்து பல நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

அதன் பிரகாரம், காலத் தேவைப்பாடுகளுக்கேற்ப சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினைத் திருத்தஞ் செய்தல், புதிய ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தினை அறிமுகஞ் செய்தல் மற்றும் சேவைச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இச்சபையினை மேலும் சிறந்த நாடொன்றுக்கான தேவை மற்றும் வினைத்திறனான அரச நிறுவகமொன்றாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளுக்கு தங்களிடமிருந்து உதவியினை எதிர்பார்க்கின்றேன்.

**கீர்த்தி ரஞ்சித் மாவல்லகே,**
தவிசாளர்.

# நிறைவேற்றுப் பணிப்பாளர் அவர்களின் செய்தி

நாட்டின் பிரஜைகள் தமது வாழ்வாதாரத்திற்கென பல்வேறான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். அதே போல அபிவிருத்திச் செயற்பாடுகளில் அதில் சேவைகளில் ஈடுபட்டுள்ள குழுக்கள் உன்னத பணியொன்றினை நிறைவேற்றுகின்றனர். இச்செயலூக்கமான சேவைகளில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் பல்வேறான வகையில் தங்கியிருப்போரின் சமூகப் பாதுகாப்புக்கான உலகின் சகல நாடுகளும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தி வருவதுடன், தற்போது அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நாட்டில் அமுற்படுத்தப்படும் அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதியம், சேவைகளில் ஈடுபட்டுள்ளோரின் நம்பிக்கை நிதியம், விவசாயிகளுக்கான ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம் அதனுள் பிரதான இடமொன்றினைப் பெற்றுள்ளது. முதுமைப் பருவத்திலுள்ளவர்களுக்கு நிதிசார் பயன்களை வழங்கி பாதுகாப்பொன்றினை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அதி உன்னத கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையினூடாக செயற்படுத்தப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தினூடாக 60 வயதிலிருந்து ஓய்வூதியம், அங்கத்தவரின் மரணித்தின் பின்னர் வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியம், பாதி அங்கவீனப் பயன்கள், முழுமையான அங்கவீனப் பயன்கள், மரணப் பணிக்கொடை போன்ற இன்னோரென்ன பல சமூகப் பாதுகாப்புப் பயன்கள் காப்பீடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டின் வருட நிறைவில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 494,294 ஆகும். மாதாந்தம் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 22,629 ஆகும். இந்நாட்டின் பிரதானமாக சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமாக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தினை விளம்பரப்படுத்துதல் காலத்தின் தேவைப்பாடொன்றாகும். அது தொடர்பில் சபையின் தவிசாளர் திரு. கீர்த்தி சுரஞ்ஜித் மாவல்லகே அவர்களைத் தலைமையாகக் கொண்ட பணிப்பாளர் சபையின் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதுடன், இனிவரும் வருடத்தினுள் முறைசார் திட்டமொன்றின் கீழ் மேலும் விரிவான சேவைச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்சபையின் பிரதான அலுவலகம் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தினை அமுற்படுத்தும்போது, மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உன்னத பங்களிப்பினை வழங்குகின்றனர். இவ் அரச உத்தியோகத்தர்களின் வலையமைப்பின் உன்னத சேவைச் சபையின் சேவைச் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகள், பாரிய வலுவொன்றாகும். இவ் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்கள் வழங்கும் சேவைக்காக நன்றியினைத் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கௌரவ. எஸ்.பீ. திசாநாயக்க அவர்களினால் புதிய பணிப்பாளர் சபையாக நாம் நியமிக்கப்பட்டு பாரிய பொறுப்பொன்று எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைச் சிறந்தவாறு எடுத்து சபையின் சகல செயற்பாடுகளும் முன்னேற்றத்தினை நோக்கிச் செல்லுவதற்கு உத்தியோகத்தர் குழாமுடன் ஒன்றிணைந்து முயற்சி எடுப்பதற்கு இயலுமை கிட்டியமை மகிழ்ச்சியடைக்கூடிய விடயமொன்றாகும்.

**சட்டத்தரணி நலின் மகேஸ் பெரேரா,**
நிறைவேற்றுப் பணிப்பாளர்.

# பொது முகாமையாளர் அவர்களின் செய்தி

2015 ஆம் ஆண்டு, இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையில் நிர்வாக ரீதியில் சில வேறுபாடு இடம்பெற்ற வருடமொன்றாகும். நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட இச்சபைக்கு 2015 பெப்ரவரி மாதத்தில் திரு. சுமதிபால காரியவசம் அவர்களினைத் தவிசாளராகக் கொண்டு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது.

அப்பணிப்பாளர் சபையின் கீழ் சபையின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளும் மீளாய்வு செய்யப்பட்டு விசேடமாக ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம் தொடர்பில் உயிரணு கணனி மதிப்பீடு செய்யும் அறிக்கையொன்றினைப் பெற்று சபையின் பொறுப்புக்கள் மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைத் திட்டத்திற்கு ஆட்சேரப்புச் செய்யப்பட்ட புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21029 ஆகும். இதனை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது அது 31% மான வளர்ச்சியொன்றாகும். அதன் பிரகாரம் 2015.12.31 ஆந் திகதி வரையில் ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தின் மொத்த அங்கத்தவர்கள் 494254 ஆகும். அதே போல ஓய்வூதியம் பெறும் மொத்த ஓய்வூதியப் பயனாளிகளின் எண்ணிக்கை 22629 ஆகும்.

ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தில் அங்கத்துவத்தினைப் பெற்றுப் பல்வேறான காரணங்களின் கீழ் அங்கத்துவத்தினைச் செயற்படாது வைத்திருக்கும் அங்கத்தவர்களுக்கு புதிய கணக்கு நிலபரம் தொடர்பில் அறிவித்தல் அனுப்புதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டினுள் 39971 அறிவித்தல்கள் தபாலூடாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசின் கீழ் அமைச்சுக்களை அமைத்தல் மற்றும் அவ்வமைச்சுக்கு நிறுவனங்களை இணைக்கும்போது இச்சபை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் விடயப் பரப்பிலிருந்து அகற்றப்பட்டு 2015 செப்ரெம்பர் மாதத்திலிருந்து சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2015.12.09 ஆந் திகதியிலிருந்து திரு. கீர்த்தி சுரங்ஜித் மாவல்லகே அவர்களைத் தவிசாளரகக் கொண்டு புதிய பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் ஓய்வூதியம் உரித்தற்ற பிரஜைகளுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களைச் செய்து கொடுக்கும் விருப்புடன் இச்சபையினூடாக அமுற்படுத்தப்பட்டுள்ள பணிகளுக்கு உந்துசக்தியாக துணை நின்ற சலக அரச உத்தியோகத்தர்களுக்கும், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர் குழாமுக்கும் மனமார்ந்த நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**தம்மிக்க பாதுக்க,**
பொதுமுகாமையாளர்.

முன்னைநாள் தவிசாளர்கள்

| பெயர் |
|---|
| திருமதி. வி. ஜெகராசசிங்கம் |
| திரு. எஸ். காரியவசம் |
| திரு. கே. ஜயலத் |
| திரு. ஆர்.எம்.டி.பி. போகககும்புர |
| திரு. ஆனந்நத கால்லேஆரச்சி |
| திரு. டீ.கே.ஆர். வீரசேகர |
| திரு. லக்ஸ்மன் கிரிமுத்துகொட |
| திரு. சுனில் சமரவீர (பதில்) |
| திரு. சரத் கீர்த்திரத்ன |
| திரு. நிமல் சந்ர அமரசிங்க |
| சட்டத்தரணி திருமதி. சுமனா ஆரியதாச |

முன்னைநாள் பொது முகாமையாளர்கள்

| பெயர் |
|---|
| திரு. ரணதுங்க கேமச்சந்ர |
| திரு. அசோக்க பீரிஸ் |
| திரு. பீ.ஏ. சோமபால |
| திரு. கே.ஜி.ஜி. விஜயவர்தன |
| திரு. பி.ஈ.சி. நேசையா |
| திரு. ஜே.எம். விஜயவர்தன |
| திருமதி. என்.ஜெ. பத்திரண |
| திரு. கே.என்.ஜெ. கூறே |

## பணிப்பாளர் சபை — 2015 ஆம் ஆண்டு

| பெயர் | பதவி |
|---|---|
| திரு. சுமதிபால காரியவசம் | தவிசாளர் |
| திரு. விஜித் உதயசாந்த செநெவிரத்ன | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| திரு. அசேல இந்தவெல | பணிப்பாளர் |
| திரு. பீ.ஏ. சந்தன ஜெ சில்வா | பணிப்பாளர் |
| திரு. லக்கி தர்மசேன | பணிப்பாளர் |
| திரு. பிரின்ஸ் அசாத் | பணிப்பாளர் |
| திருமதி அஜித்தா பட்டகொட | பணிப்பாளர் |

## 2.2.2 அமைப்புக் கட்டமைப்பு



## இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் கடமைப் பொறுப்பு

அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களை வழங்குதல் இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் கடமைப் பொறுப்பாகும்.

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஏற்பாடுகளுக்கமைய 2006 செப்ரெம்பர் 25 ஆந் திகதிய 1464/5 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக வெளியிடப்பட்டுள்ள 06 பிரேரணைத் திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டுள்ளன

பொருளாதார ரீதியில் விளைதிறனான பிரேரணைத் திட்டங்களை அமுற்படுத்துதல், அங்கத்தவர்களுக்கு உயர் பாதுகாப்பு ஓய்வூதியக் காப்பீட்டினை செய்து கொடுப்பனை நோக்காகக் கொண்டு தற்போது “சுறக்கும”” பிரேரணைத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. சுறக்கும பிரேரணைத் திட்டம் தொடர்பில் வயது 18 தொடக்கம் 59 வரையான ஓய்வூதியப் பயன்கள் உரித்தற்ற நபர்கள் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதுடன், தவணைக் கொடுப்பனவின் இயலுமையின் கீழ் அங்கத்தவருக்கு தேவையான அளவு ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

2012 ஒக்டோபர் 11 ஆந் திகதியன்று நினைவுகூரப்பட்டிருந்த “ பெண் பிள்ளைகளின் சர்வதேச தினத்தினை ஒட்டி “ஆரஸ்சாவ” முன் திட்டமிடல் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைத் திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. அப்பிரேரணைத் திட்டம் தொடர்பில் 18 வயதிற்குற்குக் குறைந்த பிள்ளைகள், தமது பெற்றோர்/பாதுகாவலர் பொறுப்பின் கீழ் அங்கத்துவத்தினை வழங்க முடியும் என்பதுடன், 18 வயதினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அவர்கள் சுறக்கும ஓய்வூதிய பிரேரணைத் திட்டத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டு கணக்கில் காணப்படும் மீதியின் பிரகாரம் ஓய்வூதிய உரித்து வழங்கப்படும்.

### பிரேரணைத் திட்டத்தின் பயன்கள்

- 60 வயதிலிருந்து வாழ்நாள் முழுவதும் அங்கத்தவருக்கு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்குதல்.
- அங்கத்தவர் ஓய்வூதியராக மரணிக்கும் வேளையில் அங்கத்தவரின் 80 வயது வரை வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குதல்.
- நிரந்தர பாதி அங்கவீன வேளையில் வயதிற்கமைய பொருத்தமான ரூபா. 25000/- வரை பணிக்கொடை மற்றும் குறிப்பிட்ட தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தி 60 வயதிலிருந்து ஓய்வூதியம்.
- நிரந்தர அங்கவீனத்தின்போது வயதிற்கமைய பொருத்தமான ரூபா. 50000/- வரை பணிக்கொடை மற்றும் சிறு பங்களிப்புப் பணம் அல்லது அங்கவீனம் ஏற்பட்ட தினத்திலிருந்து வழங்கப்படும் மாதாந்த ஓய்வூதியம்
- ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்னர் அங்கத்தவர் மரணிப்பின் தங்கியிருப்போருக்கு ஒருதடைவை வழங்கப்படும் பணிக்கொடையினை வழங்குதல்.

பிரேரணைத் திட்டத்தின் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளுதல், சபையின் பிரதான அலுவலகம், மாவட்ட அலுலவகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர்களினூடாக இடம்பெறும்.

தவணைக் கொடுப்பனவினை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அஞ்சல் அலுவலகங்கள், அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் இச்சபையின் அலுவலகங்களினூடாக இடம்பெறும்.

1. நிர்வாகப் பிரிவு

## 1. 1. அமைத்தல், அலுவலகங்களை ஸ்தாபித்தல் மற்றும் வேறுபடுத்துதல்.

1996 ஆம் ஆண்டில் சுவசிறிபாயவில் அமைந்துள்ள சுகாதார, பெருந்தெருக்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சில் 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் 1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆந் திகதி முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டதன் பின்னர் சமூகப் பாதுகாப்புச் சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்குப் பிறகு பொரள்ளயில் அமைந்துள்ள சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தின கட்டிடத் தொகுதியில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொழும்பு 06, காலி வீதி, இலக்கம் 585 என்ற இடத்தில் அமையப் பெற்ற கட்டிடத்தில் குத்தகை ஒப்பந்தமொன்றின் கீழ் வாடகைக்கு எடுக்கப்பட்டு சபை அலுவலகம் அதில் அமைக்கப்படுதல் இரண்டாவது கட்டத்தின் கீழ் இடம்பெற்றது. அதன் பின்னர் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தம்) சட்டத்தினூடாக ஆரம்பச் சட்டம் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2003.07.01 ஆந் திகதியிலிருந்து நுகேகொட, நாவல வீதி இலக்கம் 150 ஏ என்ற இடத்தில் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2010.04.30 ஆந் திகதியிலிருந்து இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதோடு 2010.12.01 ஆந் திகதியிலிருந்து இலக்கம் 125, நாவல வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 05 என்ற இடத்தில் பிரதான அலுவலகம் அமைக்கப்பட்டது. 2013.03.06 ஆந் திகதி பிரதான அலுவலகம், இலக்கம் 18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய என்ற முகவரியில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடத்தில் அமைக்கப்பட்டதுடன், அதற்கு "சமூக பாதுகாப்பு பியச" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதனூடாக மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான விளைதிறனான சேவைகளை வழங்குவற்கு இயலுமை கிடைக்கப் பெற்றுள்ளது. தற்போது சகல மாவட்டங்களையும் உள்ளடக்குமாறு சகல மாவடட்டச் செயலகங்களிலும் மாவட்டச் செயலகங்கள் நிறுவப்பட்டு சேவைச் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

## 1.2. அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் வெற்றிடங்கள்

அதிமேதகு ஜனாதிபதியின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டு சம்பளங்கள் மற்றும் ஆளணிக் குழுவின் தவிசாளரின் எஸ்ஆர் 35/339 என்ற இலக்க மற்றும் 1997 ஆம் ஆண்டு யூலை 17 ஆந் திகதிய கடிதத்தில் கோரப்பட்டிருந்த ஊழியர் சபைகள் ஆட்சேர்ப்பினை சில கட்டங்களாக வேறாக்குவதற்கும், 1997 ஆம் ஆண்டினுள் 56 பதவிகளுக்கு மாத்திரம் நியமித்தல் போதுமானது எனவும் பரிந்துரை செய்யப்பட்டது. 1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அதன் பரிந்துரை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 159 ஆளணி வரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் பின்னர் திறைசேரியினால் ஆளணியினை 88 ஆக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. 1999 ஆம் ஆண்டிலிருந்து அடிக்கடி ஊழியர் இடமாறுதல், விலகுவதால் வெற்றிடங்கள் நீண்டகாலமாகக் காணப்படுவதுடன், தற்போது சேவையிலீடுபடுத்தப்பட்ட நிரந்தர ஆளணியினர் 105 பேர் ஆகும். பதவிகளின் பிரகாரம் அவ் ஆளணி வேறாக்கப்பட்ட முறைமை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. ஆளணி போதாமையின் கீழ் நிறுவனத்தின் முன்னேற்றத்தினை எதிர்பார்க்கப்பட்டவாறு அடைய முடியவில்லை என்பதால், செயற்பாடுகளை மிகவும் விரிவுபடுத்துவதற்கு 180 பேரினைக் கொண்ட புதிய ஆளணியொன்றுக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தினைத் தயாரித்து சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவுக்கு முன்வைத்ததன் பின்னர் 2012.09.14 ஆந் திகதி முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் பதவிகள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

5. நன்றி ------------------------------------------------------------------------------------ 22

## ஆளணிப் பகுப்பாய்வு – 2015 ஆம் வருடம்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | 01 | 01 | - |
| பிரதிப் பொது முகாமையாளர் (சமூகப் பாதுகாப்பு) | 01 | 01 | - |
| பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 | - | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 | 01 | - |
| உதவிப் பொது முகாமையாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம்) | 01 | 01 | - |
| உதவிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) | 01 | 01 | - |
| உதவிப் பொது முகாமையாளர் ஓய்வூதியம்/காப்புறுதி) | 01 | 01 | - |
| உள்ளகக் கணக்காய்வு | 01 | 01 | - |
| முகாமையாளர்கள் (நிர்வாகம்) | 01 | 01 | - |
| சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 | 01 | - |
| முகாமையாளர் (மேம்பாடு) | 01 | 01 | - |
| முகாமையாளர் (உறுதிச் சேவைகள்) | 01 | 01 | - |
| முகாமையாளர் (காப்பீடு) | 01 | 01 | - |
| சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஓய்வூதியம்) | 01 | 01 | - |
| முகாமையாளர் (நிதி) | 01 | 01 | - |
| கணக்கீட்டு உத்தியோகத்தர் (சேகரிப்பு) | 01 | 01 | - |
| சிரேஷ்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | 06 | 06 | - |
| கணக்காய்வு உத்தியோகத்தர்கள் | 02 | 02 | - |
| ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | 49 | 40 | 09 |
| புலனாய்வு உத்தியோகத்தர்கள் | 02 | 02 | - |
| தரவு நிர்வாகி | 01 | 01 | - |
| புத்தகப் பதிவுனர் | 02 | 02 | - |
| கணநி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (வன்பொருள்) | 01 | 01 | - |
| கணநி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (மென்பொருள்) | 01 | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 57 | 57 | - |
| சாரதி | 09 | 08 | 01 |
| அலுவலகப் பணியாளர் | 34 | 34 | - |
| **மொத்தம்** | 180 | 169 | 11 |

**1.3. அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை அதிகரித்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.**

சபையின் இலக்கிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை எட்டுவதற்கு தேவையான ஆளணியினை அமைத்தல் பயிற்சி மற்றும் அபிவிருத்தியினூடாக அவர்களின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் இடம்பெற்று வருவதுடன், வெற்றிடங்களை நிரப்புவதனூடாக உயர் சேவை விளைதிறனொன்றை எட்டச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1.4. 2015 ஆம் ஆண்டின் விலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல்**

| பெயர் | பதவி | |
|---|---|---|
| திருமதி. சசிகா வாரணி | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் - | இராஜினாமா |
| திரு.டி.எம்.எஸ். திசானாயக்க | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் - | சேவை முடிவுறுத்துதல் |
| திரு. கே. சாசன் | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் - | இராஜினாமா |
| திரு. எஸ். சிவசீலன் | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் - | இராஜினாமா |

**1.5. நிரவாகப் பிரிவின் தற்போதைய ஆளணி**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| உ.பொது முகாமையாளர் | 1 |
| முகாரமயாளர் (நிர்வாகம்) | 2 |
| முகாமைத்துவ உதவியாளர் | 6 |
| அலுவலக உதவியாளர் | 3 |
| தவிசாளர் (அலுவலக உதவியாளர்) | 1 |
| பொது முகாமையாளர் (அலுவலக உதவியாளர்) | 1 |
| தபால் நடவடிக்கை (அலுவலக உதவியாளர்) | 1 |
| தொவைபேசி ஆபரேட்டர் (அலுவலக உதவியாளர்) | 1 |
| சாரதிகள் | 7 |
| மொத்தம் | 22 |

## 1.6. பௌதிக வளங்கள்

பிரதான அலுவலகம் - 2013 மார்ச் மாதம் 06 ஆந் திகதி இலக்கம் 18, இராஜகிரிய வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள 04 மாடி கட்டிடங்களில் சபைக்கு உரித்தான கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலகங்கள் - 2013.12.31 ஆந் திகதியிலிருந்து முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்களில் மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**1.7. தொடர்பாடல் வசதிகள்**

நிறுவனத்திற்காக வழங்கப்பட்டிருந்த தொலைபேசித் திட்டத்தினை மேம்படுத்தி சகல பிரிவுகளையும் உள்ளடக்குமாறு கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் 03 பொதுத் தொலைபேசி இணைப்புக்கள், பக்ஸ் வசதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலாகப் பின்வருமாறு நேரடித் தொலைபேசி இணைப்புக்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| தவிசாளர் | - | நேரடித் தொலைபேசிகள் மற்றும் பெக்ஸ் இலக்கப் பிரிவு |
| செயற்பாட்டுப் பணிப்பாளர் | - | நேரடித் தொலைபேசிகள் மற்றும் பெக்ஸ் இலக்கப் பிரிவு |
| பொது முகாமையாளர் | - | நேரடித் தொலைபேசிகள் மற்றும் பெக்ஸ் இலக்கப் பிரிவு |
| பி.பொது முகாமையாளர் 02 | - | தொரைபேசிகள் மற்றும் 02 பெக்ஸ் இலக்கங்கள் |
| உ.பொது முகாமையாளர் 03 | - | 03 தொலைபேசிகள் |

| | | |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு | - | 01 தொலைபேசி |
| தபால் நடவடிக்கை | - | 02 தொலைபேசிகள் |
| கொட்லைன்ஸ் | - | 01 தொலைபேசி |

மேற்குறிப்பிட்ட தொலைபேசி இணைப்புக்களுக்கு மேலாக 22 மாவட்டச் செயலகங்களுக்கும் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதான அலுவலகத்தில் கணனிமயப்படுத்தப்பட்ட வலையமைப்பு அமைக்கப்பட்டுள்ளதுடன், VPN திட்டத்தினூடாக மாவட்டச் செயலகங்களுக்கு வலையமைப்புச் செய்யப்பட்டு சேவைச் செயற்பாடுகளை மிகவும் விளைதிறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1.8. போக்குவரத்து வசதிகள்**

சபையின் பணிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் சமூக சேவைகள் திணைக்களத்தினால் பாவிக்கப்பட்ட இரண்டு வாகனங்கள் சபையின் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதற்குப் பின்னர் மேலதிக 02 வாகனங்கள் சமூக சேவைகள் அமைச்சிலிருந்து பெறப்பட்டுள்ளன. 1997/98 ஆம் ஆண்டுகளில் 05 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவ்வனைத்து வாகனங்களையும் ஓட்டச் செயற்பாடுகளுக்கென சிறந்த முறைமையில் முன்னெடுத்துச் செல்லுவதற்கு அதிகமான பழுதுபார்த்தல் செலவுகளை ஈடுசெய்வதற்கு நேரிட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டின் நிறைவில் சபைக்கு உரித்தான வாகனங்கள் 07 மாத்திரமேயாகும். அது தற்போது ஓடக்கூடிய நிலைமையிலுள்ளது. பல தடைவைகளில் புதிய வாகனத் தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டியிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டில் நிதி அமைச்சுக்கு வாகனமொன்றினை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதன் பின்னர் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வாகனமொன்றினை பெற்றுக் கொள்ளுவதற்கு ஆலோசனை கிடைத்தது. அதன் பிரகாரம் மோட்டார் வாகனம் பெறப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் 02 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சுக்கு வேண்டுகோள் செய்யப்பட்டுள்ளதுடன், நிதி ஒதுக்கப்பட்டதன் பின்னர் மைகிறோ நிறுவனத்திலிருந்து மைகிறோ றய்னோ வகைக்கு உரித்தான 02 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

250-6090 கப் வாகனம்/253-2818 கப் வாகனம் மற்றும் 32-4987 பாத் பைண்டர் மிகவும் பழைமைவாய்ந்த நிலையிலுள்ளதுடன், அவ்வாகனங்களை ஏலத்திலிட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.9 தற்போதுள்ள வாகனங்களின் விபரங்கள் வருமாறு.

| வாகன இலக்கம் | வகை | முதலில் பதிவு செய்யப்பட்ட தினம் | மிகவும் நன்று | நன்று | பழுதுபார்க்கப்பட்டு ஓட்ட நிலைமையிலுள்ளது | பழுது | அகற்றுதல் |
|---|---|---|---|---|---|---|---|
| 250 - 6095 | டபிள் கப் | 1997.10.24 | | | ✔ | | |
| 252 - 5463 | டபிள் கப் | 1998.08.14 | | | ✔ | | |
| KH - 4506 | கார் | 2008.09.30 | | ✔ | | | |
| KN - 0006 | மைய்க்றோ ஜீப் | 2011.01.13 | | | | | ✔ |
| KX –0914 | நிசான் யூகி | 2013.10.17 | ✔ | | | | |
| NB—8428 | ரொயட்டா கயஸ் வான் | 2014.08.18 | ✔ | | | | |

**1. 10. நிர்வாகப் பிரிவு**

**விசேட கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்**

01. மனிதவலு மதிப்பீடு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02. சபையின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும்போது அலுவலக களத்துறை உத்தியோகத்தர்கள் போதாமையினால் ஆளணியினை மீளளமைப்புச் செய்வது அவசியமாகும். அதன் பிரகாரம் கவனத்தினைச் செலுத்தி மனிதவலு மதிப்பீட்டினைத் திருத்தஞ் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பௌதிக வளப் பற்றாக்குறை**

1. தற்போதுள்ள வாகன அணியினுள் பழைய வாகனங்கள் அதிகமானதன் காரணமாக பழுதுபார்ப்பதற்கு அதிக செலவினை ஈடுசெய்யவேண்டியுள்ளதால் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
02. மாவட்ட அலுவலகங்களுக்கு சேவைச் செயற்பாடுகளை பன்முகப்படுத்துவதற்குப் பௌதிக மற்றும் மனித வளத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்.
03. பிரதான அலுவலகக் கட்டிடத்தில் மேலும் இடம்பெற வேண்டிய மேம்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
04. இச்சபையின் மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது உத்தியோகத்தர்களின் போக்குவரத்து கடமைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு போதிய வாகனங்களின்மையினால் அது தொடர்பில் வசதிகளை ஏற்படுத்துதல்.

**1.11.** கணனிப் பிரிவு

**பிரதான செயற்பாடுகள்**

01. ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தில் அங்கத்தவர்களுக்கான தகவல்களை முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் கணனி மென்பொருள் திட்டத்தினை அமுற்படுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
02. பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் கணனி காட்வெயார் திட்டத்தினை அமைத்தல், முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் புதிய காட்வெயார் தேவைப்பாடுகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைத்தல்.
03. மென்பொருள் மற்றும் வன்பொருள் திட்டம் தொடர்பில் நிறுவனங்களுடன் தொடர்புபடும் செயற்பாடுகள் மற்றும் உரிய நாளதுவரைப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
04. மென்பொருள் திட்டத்தின் தரவுகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வன்பொருள் திட்டத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
05. முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்களைத் தயாரித்து வழங்குதல் மற்றும் சகல சேவைப் பிரிவுகளுக்கும் உரித்தான தகவல் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்துதல்.
06. தகவல் தொழில்நுட்பத் திட்ட மேம்பாட்டிற்கான பரிந்துரைகளை முன்வைத்தல், கிரயத்தினைத் தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகளை முன்னெடுத்தல்.

**1.12.** **2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள்**

01.ஓய்வூதியம் தொடர்பில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு Advance Technologies நிறுவனத்துடன் பராமரிப்பு உடன்படிக்கை ஒப்பமிடப்படாததன் காரணமாக உரிய நிறுவனம் சுயசேவைச் செயற்பாடுகளிலிருந்து விலகுவதை காரணமாகக் கொண்டு திட்டம் தொடர்பில் சேவை வழங்குவதற்கு பாரிய அசௌகரியம் இருந்தாலும் மென்பொருள் சேவையினை வழங்குதலினூடாக கலந்துரையாடலுக்குத் தேவையான அறிக்கைளை வழங்குதல்.

02. பிரதான அலுவலகத்தின் மாவட்ட அலுவலகங்களில் கணனி வலையமைப்பு, வன்பொருளினைச் சரியான செயற்பாட்டுடன் முன்னெடுத்தல், நாளதுவரைப்படுத்தல் மற்றும் வன்பொருள் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்.

03. Data backup அன்றாடம் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மக்கள் வங்கியிலுள்ள பாதுகாப்புப் பெட்டியின் உரிய bckup தரவுகளைக் கழஞ்சியப்படுத்துதல்.

04. மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு உட்பட சில மாவட்டங்களுக்கு புதிய கணனி எந்தரங்கள், VPN வசதிகளை வழங்குதல் உரிய மாவட்டச் செயலகங்களுக்குச் சென்று நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
05.தவிசாளரின் அலுவலகத்திற்கு wi-fi வசதிகளை வழங்குதல்

06.தற்போதுள்ள கணனித் திட்டத்திற்குப் பதிலாக புதிய கணனித் திட்டமொன்றினை அமைப்பதற்காக தற்போதுள்ள திட்டத்தின் குறைபாடுகள் தொடர்பில் அறிக்கைகளைத் தயாரித்தல், புதிய கணனித் திட்டம் தொடர்பில் தேவையான Requirement Gathering முன்னெடுத்தல். **Lsnka Bell, John Keels, Zillione** போன்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் அதற்கான கருத்திட்டப் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

07. உயிரியல் கணனி அறிக்கைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு சமூகப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் நிதிசார் பிரிவுக்கு உதவுதல்.

08. புதிய அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பில் Incentive Calculator மென்பொருள் கணனிப் பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்டு சமூகப் பிரிவுக்கு கையளித்தல்.

09. நாடுபூராவுமுள்ள சகல மாவட்டச் செயலகங்களுக்கும் குறைபாடாகவுள்ள உள்ளக வலையமைப்பு வசதிகள் மற்றும் அதிக தரவுகள் வேகத்துடன் VPN வசதிகள் Dialog நிறுவனத்துடன் தொடர்புபட்டு மீளமைத்தல்.

## பதவியணி

| | | |
|---|---|---|
| **1.** சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) | | 01 |
| **2.** தரவுக் கட்டுப்பாட்டாளர் | - | 01 |
| **3.** ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | - | 01 |
| **4.** கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (மென்பொருள்) | - | 01 |
| **5.** கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (வன்பொருள்) | - | 01 |

## 2. சமூகப் பாதுகாப்புப் பிரிவு

### 2.1. பிரதான செயற்பாடுகள்

- ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைத் திட்டம் தொடர்பில் விளம்பரம் செய்தல், மேம்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும் செயற்படுத்துதல்
- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை அமுற்படுத்துதல் தொடர்பில் அப்பிரேரணைத் திட்டத்தினை அமுற்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பிரேரணைத் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டியதன் பின்னர் அங்கத்துவத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- பின் தவணைப்பணக் கொடுப்பனவு தொடர்பில் உரிய வழிகாட்டலினை முன்னெடுத்து கொடுப்பனவு செய்வதற்கான பாஸ் புத்தகம், வங்கி பற்றுச் சிட்டையினை வழங்குதல்.
- அங்கத்துவப் பிரச்சினைகளைத் தீர்த்தல், செயற்படாத நிலைமையிலுள்ள அங்கத்தவர்களை செயற்படச் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்
- ஓய்வூதியம், பாதி அங்கவீனப் பயன்கள், முழுமையான அங்கவீனப் பயன்கள், மரணப் பணிக்கொடை போன்ற பயன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பிரதான அலுவலகத்தின் சமூகப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களினையும் நிர்வகித்து சேவைச் செயற்பாடுகளை விளைதிறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நிறுவனங்கள், உத்தியோக்தர்கள் மற்றும் பொதுசன அமைப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்து ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை அமுற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 2.2. **சேவை அலகுகள் மற்றும் மாவட்ட அலுலவகங்கள்**

- சான்றிதழ் சேவைகள், ஓய்வூதியங்கள், காப்புறுதி மற்றும் மேம்பாடு என்ற வகையில் பிரதான அலுவலகத்தின் 04 சேவை அலகுகளினூடாக சேவைச் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றது

2.3. **பிரேரணைத் திட்டத்தினை அமுறப்படுத்தல் மற்றும் தொடர்புடும் உத்தியோகத்தர்கள்**

- மாவட்டச் செயலகங்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள், மாவட்டச் செயற்பாடுகளை செயற்படுத்துதல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் நேரடி ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றது.
- பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபங்களின் பிரகாரம், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளரினூடாக கிராம உத்தியோகத்தர்களுக்கு கடமை விடயங்களாக அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வுத்தியோகத்தரூடாக பிரேரணைத் திட்டத்தினை அமுறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பிரேரணைத திட்டத்தினை அமுறப்படுத்தும்போது அவ்வுத்தியோகத்தர்களின் தலையீட்டினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரதான அலுவலகத்தின் பதவியணி

| பதவி | தற்போதுள்ளோர் |
|---|---|
| பிரதிப் பொதுமுகாமையாளர் (சமூகப் பாதுகாப்பு) | 1 |
| உதவிப் பொதுமுகாமையாளர் (சமூகப் பாதுகாப்பு) | 1 |
| உதவிப் பொதுமுகாமையாளர் (ஓய்வூதியம்/காப்புறுதி) | 1 |
| முகாமையாளர்கள்/ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | |
| உறுதிச் சேவை | 1 |
| காப்புறுதி | 1 |
| ஓய்வூதியம் | 1 |
| விற்பனை மேம்பாடு | 1 |
| ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | 2 |
| முகாமைத்துவ உதவியாளர் | 15 |
| அலுவலகப் பணியாளர் | 3 |
| **மொத்தம்** | **27** |

**மாவட்ட அலுவலகங்களின் பதவியணி**

| | |
|---|---|
| 1. மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | 38 |
| 2. முகாமைத்துவ உதவியாளர் | 25 |
| 3. அலுவலக உதவியாளர் | 21 |
| **மொத்தம்** | **84** |

## 2.4 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம்

2015 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்கு மாவட்ட மட்டங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்கள்.

| | மாவட்டம் | 20 15 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு (அங்கத்தவர்கள்) |
|---|---|---|
| 01 | குருனாகல் | 5644 |
| 02 | நுவரெலியா | 4565 |
| 03 | கண்டி | 1853 |
| 04 | நுவரெலியா | 1710 |
| 05 | யாழ்ப்பாணம் | 980 |
| 06 | ஹம்பகா | 800 |
| 07 | கேகாலை | 773 |
| 08 | அம்பாறை | 703 |
| 09 | மாத்தறை | 602 |
| 10 | முல்லைத்தீவு | 588 |
| 11 | மட்டக்களப்பு | 427 |
| 12 | ஹம்பாந்தோட்டை | 366 |
| 13 | பதுளை | 364 |
| 14 | கிளிநொச்சி | 361 |
| 15 | பிற | 353 |
| 16 | மொனராகல | 266 |
| 17 | கொழும்பு | 265 |
| 18 | இரத்தினபுரி | 161 |
| 19 | அனுராதபுரம் | 157 |
| 20 | களுத்துறை | 154 |
| 21 | காலி | 152 |
| 22 | மாத்தளை | 152 |
| 23 | திருகோணமலை | 78 |
| 24 | பொலன்னறுவை | 67 |
| 25 | மன்னார் | 58 |
| | **மொத்தம் (அங்கத்தவர்கள்)** | **2 1599** |

**2.5. 2015 ஆம் ஆண்டின் பயன்களை வழங்குதல்**

| விபரம் | எண்ணிக்கை | செலவு (ரூபா) |
|---|---|---|
| ஓய்வூதியக் கொடுப்பனவு | 22629 | 204,482,599.60 |
| மரணப் பணிக் கொடுப்பனவு | 83 | 2,123,684.37 |
| பாதி அங்கவீனப் பணிக் கொடுப்பனவு | 02 | 30,000.00 |
| முழு அங்கவீனக் கொடுப்பனவு | 26 | 541,579.00 |
| **மொத்தம்** | | **207,177,862.97** |

| ஆட்சேர்ப்புக்கள் மற்றும் தவணைக் கூட்டங்கள் | ලැබීම් (රු.) |
|---|---|
| ஆட்சேர்ப்புச் செய்தலின் ஆரம்ப தவணைப் பணம் | 11,825,266.00 |
| வங்கிகளினூடாகத் திரட்டப்பட்ட தவணைப் பணம் | 55,142,610.00 |
| அஞ்சல் அலுவலகங்களினூடாகத் திரட்டுதல். | 89,267,238.00 |
| **மொத்தம்** | **156,235,114.00** |

**2.6. 2015 ஆம் ஆண்டில் பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட நிதி**

| விபரம் | எண்ணிக் கை | செ. செய்யப்பட்ட நிதி |
|---|---|---|
| ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 64 | 205,027.00 |

**2.7. 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் நடமாடும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி திட்டம்**

**2.8. சமூகப் பாதுகாப்புப் பிரிவின் பிரச்சினைகள்**

1. மாவட்டச் செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆளணியினர் வரையறுக்கப்பட்டுள்ளதால் நேரடித் தலையீட்டின் கீழ் பிரேரணைத் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல், ஆட்சேர்ப்புச் செய்தல், தவணைகளைச் சேர்ப்பதற்கு சபையின் நேரடி நிர்வாகத்திற்கு உட்படாத உத்தியோகத்தர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நேரிடுதல்.
2. விளம்பரச் செயற்பாடுகளுக்கு போதிய நிதியின்மையினால் இலத்திரனியல், அச்சடித்த மற்றும் ஏனைய விளம்பரச் செயற்பாடுகள் பலவீனமான நிலைமையில் காணப்படுவதுடன், அக்காரணங்களினால் பிரேரணைத் திட்டத்தினை விளம்பரஞ் செய்தல் மந்த கதியிலுள்ளது.
3. பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட களத்துறை உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகுதல் பரவலாகக் காணப்படுவதன் காரணமாக ஊழியர் வந்துசெல்லும் போக்கு வீதம் உயர்ந்துள்ளதுடன், புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளித்து சேவையிலீடுபடுத்துவதற்கு நேரிடுதல்.

4. ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்குச் சமமாக அமுற்படுத்தப்படும் விவசாய ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தின் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்படாமையின் காரணமாக களத்துறை மட்டங்களின் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்கு தடைகள் வருதல் மற்றும் புதிய பங்களிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் குறைந்து செல்லுதல் மற்றும் அங்கத்தவர்கள் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தாதிருத்தல்.

## 03.நிதிப் பிரிவு

### கடமைப் பொறுப்பு

- கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கணக்கு அறிக்கைகளைச் சரியான வகையில் முன்னெடுத்துச் செல்லுதல்.
- ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்திற்கு பங்களிப்பு நிதியினை அறவீடு செய்தல்
- பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிதியினை முதலீடு செய்தல்.
- பங்களிப்பாளர்களுக்கு மாதாந்த ஓய்வூதியத்தினைக் கொடுப்பனவு செய்யும்போதும் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செய்யும்போதும் அவற்றினைச் சரியானவாறு தயாரித்தல்.
- வங்கிக் கணக்குகளை முறைசார் வகையில் முன்னெடுத்துச் செல்லுதல்.
- முகாமைத்துவப் பணிகள் தொடர்பில் திறைசேரிக்கும் மற்றும் அமைச்சுக்கும் அடிக்கடி முன்வைக்கப்பட வேண்டிய நிதிசார் அறிக்கையினைத் தயாரித்தல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வருடாந்த நிதிசார் கூற்றினைத் தயரித்தல் மற்றும் குறிப்பிட்ட அறிக்கைகளைக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைத்தல்.
- வருடாந்தப் பாதீட்டு ஏட்டினைத் தயாரித்தல்.
- முகாமைத்துவத்திற்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்குத் தகவல்களை வழங்குதல்.

### 3.1. பொதுவான விடயங்கள்

சகல காசோலைகளை எழுதுதலும் மற்றும் கணக்குகளைத் தயாரிக்கும் பணியும் மற்றும் சம்பளங்களைத் தயாரித்தலும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

வருடாந்தம் ரூபா.186 இலட்சம் மாத்திரம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதுடன், நாடுபூராவுமுள்ள 900 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினூடாக ஓய்வூதியம் வழங்குவது இடம்பெற்று வருகின்றது.

தற்போது நாடுபூராவுமுள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினூடாக பங்களிப்பாளரின் நிதியினைச் சேகரித்தல் இடம்பெறுகின்றது. வெளிநாடுகளில் கடமைகளில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு வதிவிட வெளிநாட்டு நிதிக் கணக்கும் (RFC) மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டு அமுற்படுத்தப்படுதல்.

### 3.2. நிதிப் பிரிவின் பதவியணி

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் | வெற்றிடம் உள்ளது. |
| உதவிப் பொது முகாமையாளர் | 01 |
| கணக்கீட்டு உத்தியோகத்தர் | 01 |
| காசாளர் | 01 |
| கணக்குப் பதிவுனர் | 02 |
| முாமைத்துவ உதவியாளர் | 11 |
| கணக்கு உத்தியோகத்தர் (சேர்த்தல்) | 01 |
| அலுவலகப் பணியாளர் | 03 |

## 4. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### 4.1 விடயப் பரப்பு

உள்ளக நிர்வாகக் கட்டமைப்பு, அதிகார வரையறைகளை இனங்காணுதல், நிர்வாகச் செயற்பாடுகளில் விளைதிறன் மற்றும் ஆளணியினரின் முன்னேற்றத்தின் சிறந்ததாக மதிப்பீடு செய்தல்.

கொடுக்கல் வாங்கல்களை அமுற்படுத்துதல், நிதி முகாமை, பாதீடு, சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளில் காட்டப்பட்டவாறு பரிசோதித்தல்.

செயற்பாட்டு நடவடிக்கை மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் விளைதிறன் மற்றும் சாதனையினை மதிப்பீடு செய்தல்.

சொத்துக்களின் முகாமை மற்றும் பாதுகாப்பினை மதிப்பீடு செய்தல்.

கணனிமயப்படுத்தப்பட்ட தரவுகளைத் தயாரித்தல் மற்றும் கணனித் திட்டங்களின் பாதுகாப்பினை மதிப்பீடு செய்தல்.

வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதலின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல்

### 4.2 கடமைப் பொறுப்பு
### நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள்

- தொழிற் குறிப்புக்கள் மற்றும் தொழில் விபரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஆளணியினைப் பரீட்சித்தல்.
- ஆளணியினை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பிரத்தியேகக் கோவையினைப் பரீட்சித்தல்.
- ஆளணியினரின் உள்வருகை மற்றும் வெளிச் செல்லுகை மற்றும் விடுமுறைகளைப் பரீட்சித்தல்.
- ஊழியர் நலன்புரி மற்றும் .ஊக்கச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- ஊழியர் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- வாகன ஓட்டங்கள் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- பராமரிப்புச் செயற்பாடுகள் மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சேவைச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- திறைசேரி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுதல் மற்றும் பங்களிப்புத் தவணைப் பணம் கிடைக்கப் பெறுதலினைப் பரீட்சித்தல்.
- கொள்முதற் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்..
- சகல மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளைப் பரீட்சித்தல்..
- வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதனைப் பரீட்சித்தல்.
- முதலீட்டுச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்..
- கணக்கு அறிக்கைகள் மற்றும் நிதிசார் கூற்றினைத் தயாரித்தல், பரீட்சித்தல்.

**செயற்பாட்டு நடவடிக்கைகள்**

· ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கென அங்கத்தவர்களைச் ஆட்சேர்த்தல், ஆட்சேர்ப்பு விண்ணப்பப் படிவங்களை கணனிமயப்படுத்தல, உறுதிகளைப் பரிசோதித்து வழங்குதல், தவணைகளைச் செலுத்துதல் மற்றும் கணக்குகளைப் பரிசோதித்தல்.

- ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய பயன் கொடுப்பனவுச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- அங்கத்துவத்திலிருந்து அகற்றுவதற்கு கொடுப்பனவுகளைப் பரீட்சித்தல்.
- மேம்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைப் பரீட்சித்தல்.
- களத்துறைகளைப் பரீட்சித்தல்.
- விசேட ஆய்வுச் செயற்பாடுகள்
- விசேட ஒப்படைப்புக்கள்
- கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் விடையளிப்பதனை ஒருங்கிணைப்புச் செய்தல்.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்**

2015 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்ட தினங்கள்/

· 2015 மார்ச் 13

· 2015 யூலை 24

· 2015 ஒக்டோபர் 29

4.4 **2015 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள்.**

நிலையான சொத்து முகாமை

எரிபொருள் பாவனை மற்றும் ஏடுகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

வாகன ஓட்டம், நிர்வாகம் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள்.

நிலையான சொத்துக்கள் மற்றும் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்குத் திட்டம்

செயற்பாடுகள், விளம்பரங்கள் மற்றும் மேம்பாட்டுச் செலவுகள்

அங்கத்தவர்களைச் சேர்த்தல் மற்றும் உறுதிகளை (deeds) வழங்குதல்

பங்களிப்புத் தவணைப் பணங்களை ஒன்றுதிரட்டுதல்.

ஓய்வூதியக் கொடுப்பனவு

வங்கிகளினூடாகத் தவணைகளை ஒன்றுதிரட்டுதல், கணக்கீட்டினை மேற்கொள்ளுதல், பங்களிப்புக் கணக்குகளை நாளதுவரைப்படுத்துதல் மற்றும் இனங்காணப்படாத வங்கி வைப்புக்கள்– முதலாவது அறிக்கை.

- மாவட்ட அலுவலகங்களைப் பரீட்சித்தல் (பொதுவான பலவீனங்கள்)
- பயணச் செலவுகள்
- கொள்முதற் செயற்பாடுகள்
- தபால் மற்றும் தொடர்பாடற் செலவுகள்
- அடையாளங் காணப்படாத வங்கி வைப்புக்கள் –இரண்டாவது அறிக்கை
- வரவு - புறப்படுதல் மற்றும் விடுமுறைகள்

## களத்துறைகளைப் பரீட்சித்தல்.

- ஹம்பகா மாவட்டச் செயலகம்
- புத்தளம் மாவட்டச் செயலகம்
- கண்டி மாவட்டச் செயலகம்
- ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம்
- மாத்தறை மாவட்டச் செயலகம்
- பதுளை மாவட்டச் செயலகம்
- அனுராதபுரம் மாவட்டச் செயலகம்
- பிரதேச செயலகங்களைப் பரீட்சித்தல்

## விசேட பணிகள்

- நிலையான சொத்துக்கள் ஏடு மற்றும் பொருட் கணக்கெடுப்பாய்வு அறிக்கை
- சபைக்குரித்தான நிதியம்
- பங்களிப்பாளர்கள் சபை தொடர்பில் கொண்டுள்ள உளப்பாங்குகளைப் பரீட்சிப்பதற்கான ஆய்வு.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவிகள் மற்றும் வெற்றிடங்கள்.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 2015.12.31 அன்று உள்ளோர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு | 01 | 01 | - |
| கணக்காய்வு உத்தியோகததர் | 02 | 02 | - |
| புலனாய்வு உத்தியோகத்தர் | 02 | 02 | - |

2015.12.31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களின் குறிப்புக்கள்

## கணக்கீட்டுக் கொள்கைகள்

1. கூட்டுத் தகவல்

### 1.1. தோற்றுவாய் மற்றும் சட்ட வடிவம்

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை 1996 ஆம் ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது, சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சின் கீழ் விரிவுபடுத்தப்பட்ட அதன் சேவையானது தற்போது செயலூக்கமான வகையில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது. அதன் தலைமை அலுவலகமானது, இலக்கம் 18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய, ஸ்ரீ லங்கா என்ற முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது.

### 1.2. அடிப்படைச் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டுத் தன்மை

அரசாங்க ஓய்வூதியமொன்றுக்கு உரித்தற்ற இலங்கைப் பிரஜைகளுக்கு சமூகப் பாதுகாப்பு நன்மைகள் மற்றும் ஒரு மாதாந்த ஓய்வூதியத்தினை வழங்குவதனை உறுதிப்படுத்துவதே இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பிரதான தொழிற்பாடாகும். ஓய்வூதியத் திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் திட்டத்தினூடாக, மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு, பகுதியளவிலான மற்றும் மொத்தமான அங்கவீனப் பயன்கள் மற்றும் மரணப் பணிக்கொடையென இன்னோரென்ன கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

### 1.3. ஊழியர்களின் தொகை

இவ்வருட முடிவில் ஊழியர்களின் தொகை 162 ஆக இருந்தது.

2. **தயாரிப்பின் அடிப்படை**

### 2.1. நிறைவுக் கூற்று

இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் நிதிசார் கூற்றானது, நிதிசார் நிலைமை கூற்று, நிதிசார் செயற்பாட்டுக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிசார் கூற்றுக்களின் குறிப்புகளை உள்ளடக்குகின்றது. இக்கூற்றுக்களானவை. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் மூலம் கூறப்பட்ட இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது

### 2.2. அளவீட்டு அடிப்படை

நிதிசார் கூற்றுக்களானவை, வரலாற்றுசார் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிசார் கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகள் தொடர்பில் எவ்வித சீராக்கல்களும் முன்னெடுக்கப்படவில்லை.

2.3. தொழிற்பாடு சார் தற்போதைய நாணயம்

இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை தொழிற்படுசார் நாணயமாகப் பயன்படுத்தும் இலங்கை ரூபாக்களில் இந் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

3. **பிரத்தியேகக் கணக்கீட்டுக் கொள்கைகள்**

இந்நிதிசார் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட சகல காலப்பதிகளுக்கும், கீழே காட்டப்பட்ட இந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் கணிசமானளவு பிரயோகிக்கப்பட்டுள்ளன.

3.1. **சொத்து, பொறித் தொகு மற்றும் உபகரணம்**

சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் கிரயமானது, அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கான அதன் செயற்படும் நிலையிலுள்ள சொத்தினைக் கொண்டுவந்து செலவு செய்யப்பட்ட ஏதாவது செலவுகளுடன் ஒன்றிணைந்து கொள்முதல் செய்தல் அல்லது நிர்மாணிக்கும் கிரயமாகவுள்ளது. பின்வரும் எந்தவொரு தேய்மானத்தின் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில், கிரயச் சொத்து மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளாக பின்வருமாறான ஆரம்ப அங்கீகாரமாகவுள்ளது. ஏனைய சகல சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபரகணங்களானவை, திரண்ட தேய்மானத்தினை விட குறைந்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. பல்வேறான பயனான ஆயுட்காலத்தினைக் கொண்ட பாரிய பொறித்தொகுதிகள், சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு விடயமாக உள்ளடக்குகின்றது. சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு தனியான விடயமாகவே அவை கணக்கிடப்படுகின்றன.

ஒவ்வொரு நிதியாண்டு முடிவின்போதும், உரித்தாகும் சொத்துக்களின் மீதிப் பெறுமதிகள், பயன்படும் ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் மீளாய்வு செய்யப்படுட்டு இணக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

**நன்கொடையொன்றாகப் பெறப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

யாதேனும் நன்கொடையொன்றின் கீழ் கொள்ளப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை கிரயத்தின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டுள்ளது.

சொத்துக்கள், எந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய பயன்படுத்தப்படாத காணிகள் எனக் காணப்பட்டவை, திரண்ட மீதியினைக் குறைத்த கிரயமாகவேயாகும். பயன்படுத்தப்படாத காணி கிரயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட் காலத்தினை விட கிரயத்தினை நீக்குவது தொடர்பில் பயன்படுத்தப்படாத காணிகள் தவிர ஏனைய சகல சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் தேய்மானம் அறவிடப்படுகின்றது.

விகிதாசார அடிப்படையின் கீழ் தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் ஒதுக்கீடுகள் கணிப்பிடப்பட்டிருப்பது, பின்வருமாறு நேர் கோட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். அதே போல அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களில் காட்டப்பட்டவாறு சகல சொத்துக்கள், எந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகளின் தேய்மானம் கணிப்பிடப்பட்டிருப்பது கிரயத் திட்டத்தின் கீழாகும்.

| | | |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகனங்கள் | 20% |
| 2. | பொறித்தொகுதி, எந்திரம் மற்றும் உபகரணம் | 25% |
| 3. | கணனி மற்றும் ஏனைய நிலையான சொத்துக்கள் | 25% |
| 4. | தொலைபாடல் | 20% |
| 5. | தளபாடம் மற்றும் அலுவலக உபரகணம் | 10% |
| 6. | கட்டிடம் | 4% |
| 7. | பிற | 10% |
| 8. | மென்பொருள் | 25% |

அகற்றப்படுகின்ற அல்லது அதனை அகற்றும்வேளையில் அல்லது பாவிக்கும்வேளையில் எதிர்காலப் பொருளாதாரப் பெறுமதி அல்லது எதிர்பார்க்கப்படாத பகுதி, பொருளாதாரப் பெறுமதியொன்றில்லாத சொத்து, எந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்படும். இவ்வாறு பொருளாதாரப் பெறுமதியொன்று இல்லாது அகற்றப்படும் சொத்து ஏதேனும் கிடைப்பனவு அல்லது தொலைந்துபோனதாக் கணிப்பீடு செய்யப்படுவது, தேறிய அகற்றுதல் முன்னெடுப்பினூடாக என்பதுடன், வேறுபடும் வேளையில் சொத்துக்கள் அகற்றப்படும் வருடத்தின் வருமானக் கணக்கில் இச்சொத்துக்களின் புத்தகப் பெறுமதி காட்டப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாட்டு நியமத்தினூடாக எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலப் பொருளாதாரப் பயன்களை முன்னெடுப்பதற்கு அல்லது மீளமைப்பதற்கான சொத்துக்கள், எந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகளை முன்னெடுத்தல் அல்லது பழுதுபார்த்தலின் கீழ் செலவு செய்யப்படுவது கிரயமொன்றென அடையாளங் கண்டாகும்

### 3.2. பொருட் கணக்கெடுப்புக்கள்

நிதிசார் ஆண்டில் பாவிக்கப்பட்ட கணக்கெடுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு என்ற வகையில் காட்டப்பட்டுள்ளது.

கையிருப்பு மீதிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பது, கிரயம், விற்பனை விலை அல்லது தேறிய அனுமானம் செய்யக்கூடிய பெறுமதியிலிருந்து மிகவும் குறைந்த பெறுமதியினைக் கொண்ட சுட்டியொன்றின் கீழாகும். (கணக்கெடுப்புக்கள்).

### 3.3. குறுகிய கால முதலீடு

ஒரு வருடத்திற்குக் குறைந்த முதிர்வினைக் கொண்ட நிதி சந்தை விலை முதலீடுகளில் குறுகிய கால முதலீடொன்றாக கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன், கிரயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.4. காசு மற்றும் காசுச் சமன்பாடுகள்

இதன் கீழ் கணிப்பிடப்படுவது, கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள பணமாகும்.

### 3.5. காசுப் பாய்ச்சல் கூற்று

